# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு

பெறுகைக் கைந்நூலுக்கான

## பிற்சேர்ப்பு - 12

## வெளியிடப்பட்ட திகதி – 2007-08-09

**(பண்டங்களும் கட்டுமான வேலைகளும் - 2006 பெறுகை வழிகாட்டு நெறிகளுடன் பயன் படுத்துதல் வேண்டும்.)**

**பெறுகை வழிகாட்டு நெறிக் குறிப்பீடு: 3.9.1**

சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளுடன் நேரடியாக ஒப்பந்தஞ் செய்தல். **(CBO)**

**பிரிவுகளை இப்பிற்சேர்ப்பு மேலோங்கி நிற்கும்.**

# தேசியப் பெறுகை முகவர் நிலையம்

பெறுகை வழிகாட்டுநெறிக் குறிப்பீடு 3.9.1(தொடர்ச்சி)

**சமுதானய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளுடன் (சஅஒ)**
**நேரடியாக ஒப்பந்தஞ்செய்தல்**

கருத்திட்டத்தினது நிலைபேறானத்னமையின் நலன்கருதி, அல்லது இடப்பரப்பில் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல் போன்ற குறித்த சில குறிப்பிட்ட சமூகக் குறிக்கோள்களை எய்துவற்கு, பெறுகை நடவடிக்கை முறைகளில் உள்ளூர் சமுதாயங்களின் பங்குபற்றுகையைக் கோருதல் பிரதேச செயலாளரினதும் இரு நியமத்தர்களைக் கொண்ட குழுவொன்றின் விதப்புரையின் மீதும் பெறுகின்ற உருவகம் கீழே குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுக்கு நிர்மாணக் கட்டுமாமனவேலைகளைப் பொறுப்பிக்கலாம்.

| நிபந்தனைகள் | மதிப்பீடு | அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் |
|---|---|---|
| • பெறுகின்ற உருவகம், சங்கத்தின் நிறைவேற்று ஆற்றலை மதிப்பீடு செய்து திருப்திப்படுத்தல் வேண்டும்.<br><br>• ஒப்பந்த அளிப்புத் திகதிக்கு ஆகக்குறைந்தது இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரேனும் சங்கமொன்றாகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.<br><br>• அவ்வாறு பொறுப்பிக்கப்பட்ட கட்டுமான வேலைகள் சங்கத்தின் அதிகார இடப்பரப்பினுள்ளும் நோக்கெல்லையினுள்ளும் இருத்தல் வேண்டும்<br><br>• பொறுப்பிக்கப்பட்ட கட்டுமான வேலைகள் கீழொப்பந்தஞ் செய்யப்படுதலாகாது.<br><br>• கொடுக்கப்பட்டவொரு நேரத்தில் சங்கத்தினால் நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தங்களின் மொத்த எண்ணிக்கை மூன்றை விஞ்சுதலாகாது.<br><br>ஏற்கனவே அளிக்கப்பட்ட ஒப்பந்தங்களின் மீதிப் பாகத்தின் கூட்டு மொத்தப் பெறுமதியும் உத்தேசிக்கப்பட்ட ஒப்பந்தத்தின் பெறுமதியும் 2 மில்லியன் ரூபாவை விஞ்சுதலாகாது. | சங்கமானது பின்வருவனவற்றுள் ஒன்றை எண்பிப்பதற்குச் சான்று வழங்குதல் வேண்டும். ஒன்றில்:<br><br>(i) தரம் எம் 8க்கு அல்லது அதற்கு மேற்பட தேசியப் பதிவு முறைமையின் கீழ் நிர்மாண, பயிற்சி, மற்றும் அபிவிருத்திக்கான நிறுவகத்துடன் அவை பதிவுசெய்யப்பட்டுள்ளன வென்று அல்லது<br><br>(ii) பின்வருவனவற்றைக் குழுவுக்கு, அவற்றின் பரிசீலனைக்காகச் சமர்ப்பித்தல் வேண்டும்:<br><br>(அ) வங்கிக்க கூற்றுகள் மேலதிகப்பற்று வசதிகளை அங்கீகரிக்கும் வங்கிகளிலிருந்தான கடிதங்கள் முதலியவற்றின் வடிவத்திலான நிதி மூலவளங்கள்:<br><br>(ஆ) இவற்றையொத்த கட்டுமான வேலைகள் பற்றிய கடந்தகால அனுபவம்:<br><br>(இ) கடந்த 3 ஆண்டுகளினுள் அவர்களுக்கு ஒப்பந்தஞ் செய்யப்பட்ட கட்டுமான வேலை பற்றியும் 3 ஆண்டுகளுக்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்டிருப்பினுங் கூட:<br><br>பூர்த்திசெய்யப்பட்டிராத எவையேனும் ஒப்பந்தங்கள் பற்றியும் சங்கத்தினாலான ஒரு வெளிப்படுத்துகை ஒ(ஒப்பந்தத்தின் பெயர், அமைவிடம், வாடிக்கையாளர் ஒப்பந்தப் பெறுமதி மற்றும் தற்போதைய நிலைமை தரப்படுதல் வேண்டும்) அத்துடன்<br><br>(ஈ) கட்டுமான வேலையானது கீழொப்பந்தஞ் செய்யப்பட மாட்டாதெனச் சங்கத்தினாலான ஒரு வெளிப்படுத்துகை. | ○ சமுர்த்தி பாலகர்கள்/ சமுர்த்தி சமிதி:<br><br>○ பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்<br><br>○ கூட்டுறவுத் தொழிற் சங்கங்கள் (தொழிற் சேவை மட்டும்):<br><br>○ கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள்<br><br>○ பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் (அதிகார இடப்பரப்பு இயைபான பாடசாலை வளவுகள் மட்டுமே):<br><br>○ தோதான அதிகாரிகளினால் அங்கீகரிக்கப்பட்ட விவசாயி ஒழுங்கமைப்புகள்:<br><br>○ (உள்ளூராட்சித் துறையில் அபிவிருத்திச் செயற்பாடு களுக்குப் பங்களிக்கின்ற) கிராமோதய மண்டலங்களும் பிரஜா சங்வர்தன சமிதியும்.<br><br>○ கெமிதிரிய மக்கள் கம்பனிகள்<br><br>○ கூட்டுக் கட்டிடத் தொடர்மாடி முகாமைத்துவ அதிகார சபையில் பதிவு செய்யப்பட்ட கூட்டுக்கட்டிடத் தொடர்மாடி முகாமைத்துவக்கூட்டுத்தாபனம்.<br><br>○ விஹாரஸ்த கார்ய காரக சமித்திகள் (உரித்துடைய கோவில்கள் மற்றும் தம்ம பாடசாலை வளவிற்குள் வேலை செய்யும்)<br><br>விஹாரஸ்த தாயக்க சபா (உரித்துடைய கோவில்கள் மற்றும் தம்ம பாடசாலை வளவிற்குள் வேலை செய்யும்) |

சமுதாய ஒழுங்கமைப்புகளுக்கான நேரடி ஒப்பந்தஞ் செய்தல் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டத்தின கீழ் அளிக்கப்படலாம் ஆயின், உத்தேசிக்கப்பட்ட நடவடிக்கை முறைகள் கடன் உடன்படிக்கையில் தரப்பட்டிருத்தல் வேண்டும்